**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.304/2024**

| Deposition of Name | ரமேஷ் | Prosecution | LW-2 as PW-2 |
|---|---|---|---|
| Father Name | தியாகராஜன் | Defence | |
| Address | பெரம்பூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 55/2025 |

Solemnly affirmed by Tmt.K.Keerthana Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **06.11.2025**

**2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை மனுசெய்து அனுமதிக்கப்பட்டது.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து சலவை தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

ஆஜர் எதிரியையும், அசா.1 ஐயும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எனது தெருவை சேர்ந்தவர்கள். கடந்த 30.10.2022 ஆம் தேதி மாலை 5 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது எதிரிகள் அ.சா.1 ன் வீட்டின் முன்பு நின்று கொண்டு அ.சா. 1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, கட்டையால் தாக்கியும், காலால் எட்டி உதைத்தும் கொலை மிரட்டில் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் போலிசார விசாரணையில் குறிப்பிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC.304/2024**

| Deposition of Name | Ramalingam | Prosecution | LW- 1as PW-1 |
|---|---|---|---|
| Father Name | Kunju | Defence | |
| Address | பெரம்பூர் | Taluk | சீர்காழீ |
| District | மயிலாடுதுறை | Age | 65/2025 |

Solemnly affirmed by Tmt.K.Keerthana Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>06.11.2025</u>**

**<u>2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை மனுசெய்து அனுமதிக்கப்பட்டது.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 30.10.2022 ஆம் தேதி மாலை 5.00 மணியளவில் நான் எனது வீட்டில்இருந்தபோது எதிரிகள் எனது வீட்டின் வாசலில் வந்து நின்று எதற்காக வேலி சம்மந்தமான பிரச்சனைக்கு என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாய் என்று கேட்டு தகாத வார்த்தைகளால் திட்டி கட்டையால் எனது காலிலும் தலையிலும் தாக்கினார்கள் எதிரி இந்திரா என்னை நெஞ்சில் எட்டி உதைத்தார். எதிரி பாலகிருஷ்ணன் அறிவாலால் எனது தலையில் வெட்டிவிட்டார். இருவரும் என்னை கொல்லாமல் விடமாட்ன் என்று மிரட்டினார்கள் அருகில் இருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டு என்னை சிகிச்சைக்காக சீர்காழி அரசு மருத்தவமனையில் சேர்த்தனர். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணைக்கு முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்படுகிறது.**